DECEMBER 2023 **P/ID 35319/PTL2J**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. தொல்காப்பிய அகத்திணையியல் சுட்டும் மூவகை வழக்குகள் எவை?

2. நமக்குத் தொழில் கவிதை என்று சாற்றியவர் யார்?

3. சுரதாவின் இயற்பெயர் என்ன?

4. எண் வகை மெய்ப்பாடுகளைப் பட்டியலிடுக.

5. வெகுளி – பொருள் கூறுக.

6. உருவகத்திற்குச் சான்று தருக.

7. சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள் யாவை?

8. குறிக்கோளியம் என்றால் என்ன?

9. எதுகை எவ்வாறு அமையும்?

10. அறம் என்றால் என்ன?

11. பரணி இலக்கியம் எங்ஙனம் பெயர் பெறும்?

12. கதைப் பின்னல் குறித்து எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. 'இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே' – விளக்குக.

14. பா என்னும் சொல்லுக்கு உரையாசிரியரான பேராசிரியர் தரும் விளக்கம் யாது?

15. இலக்கியத்தைச் சமூக நிறுவனமாகக் கருதலாமா?

16. சிலப்பதிகாரத்தின் பாவிகம் யாது?

17. இலக்கியக் கல்வியின் இன்றியமையாமையைத் தெளிவுறுத்துக.

18. அகத்தெழுச்சிக் கொள்கை குறித்து எழுதுக.

19. சிறந்த சிறுகதை எவ்வாறு அமைய வேண்டும்?

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. இலக்கியம் வாழ்க்கையை எதிரொளிக்கின்ற கண்ணாடியாகுமா? விவாதிக்க.

21. இலக்கியத்தை மொழிவழி நுண் கலையாக நிறுவுக.

22. அறிவியல் நெறிப்படி வகைப்படுத்தப்பட்ட மூவகை இலக்கிய விளக்கங்களை எடுத்துரைக்க.

23. சிற்றிலக்கியக் கொள்கைகளைப் பட்டியலிடுக.

24. இக்காலத் தமிழ் இலக்கியப் போக்கை மதிப்பிடுக.

———————